மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.03/2023
அ.வ.எண்.73/2023

P.சந்துரு ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. தமிழ்நாடு அரசு சார்பாக
   மாவட்ட ஆட்சியர், சேலம்.
2. வருவாய் கோட்டாட்சியர், மேட்டூர் அணை–1.
3. வட்டாட்சியர், மேட்டூர் அணை–1.
4. வருவாய் ஆய்வாளர், பொட்டனேரி.
5. கிராம நிர்வாக அலுவலர், கூனாண்டியூர் கிராமம்.
6. தலைவர், கூனாண்டியூர் கிராம பஞ்சாயத்து.
7. வட்டார வளர்ச்சி அலுவலர், மேச்சேரி பஞ்சாயத்து யூனியன்.
8. அங்கமுத்து
9. கண்ணுபையன்
10. காசி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 08.02.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.வைத்திலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.ஹரிநாராயணன் அவர்கள் ஆஜராகியும், 8 முதல் 10 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதிகள் 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) வாதி/மனுதாரரால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகள்/

எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தானது ச.எண்.177/1A ல் உள்ள 2.57 பு.ஏ. விவசாய நிலமாகும். தாவா சொத்து மனுதாரரின் தகப்பனார் பழனிமுத்துவிற்கு பாத்தியப்பட்டதாகும். கடந்த 19.05.2000ம் தேதியில் மேற்படி பழனிமுத்துவால் தாவா சொத்து குறித்து மனுதாரர் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் அளிக்கப்பட்டு, மனுதாரர் தனிப்பட்டா பெற்று, தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்.

(ii) இந்நிலையில் தாவா சொத்திற்கு அருகிலுள்ள ச.எண்.749/5 அரசிற்கு சொந்தமான தரிசு புறம்போக்கு நிலத்தில் மயானம் அமைக்க வேண்டி கோபாலன் மற்றும் பலர் சேர்ந்து 1ம் எதிர்மனுதாரரிடம் மனு கொடுத்து மயானம் அமைப்பதற்காக தேர்வு செய்துள்ளனர். மேலும் இந்நிலத்திற்கு அருகில் ஏராளமான நபர்கள் விவசாயம் செய்து வருகின்றனர். மேற்படி நிலத்தில் இரண்டு ஆழ்துளை கிணறும், ஒரு திறந்த வெளி கிணறும் உள்ளதால் கிணற்றுநீரை அப்பகுதியிலுள்ள சுமார் 50 குடும்பத்தினர் குடிநீருக்காகவும், சமையலுக்கும் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் அருகில் ஏரி உள்ளதால் அதில் மழைக்காலங்களில் தண்ணீர் நிரம்புகிறது.

(iii) மேற்படி நிலத்தில் மயானம் அமைத்தால் குப்பைகள் குவிக்கப்பட்டு குடிதண்ணீர் பாதிப்படையும். மேலும் கடந்த 05.04.2023ம் தேதியில் 8 முதல் 10 எதிர்மனுதாரர்களுக்கு ஆதரவாக 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் சாலை அமைக்க முயன்றனர். மனுதாரரின் பட்டாநிலத்தில் மனுதாரரின் ஒப்புதலை பெறாமலும், முறையாக சட்ட அறிவிப்பு கொடுக்காமலும் பாதை உருவாக்க முயற்சிக்கின்றனர். தாவா சொத்தில் ஏதேனும் பொது வழி உருவாக்கினால் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு விடும். மேலும் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் சாலை அமைக்க 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் செயல்படுகின்றனர். எனவே மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) 6ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, குறிப்பாணையின் பேரில் 1 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:—

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. தாவா சொத்து ச.எண்.177/1A ல் உள்ள 2.57 பு.ஏ. விவசாய நிலம் என்றும், அது மனுதாரரின் தகப்பனார் பழனிமுத்துவிற்கு பாத்தியப்பட்டு, கடந்த 19.05.2000ம் தேதியில் தானசெட்டில்மெண்ட் ஆவண எண்.719/2000 ன்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டு, தனிப்பட்டா பெற்று, அனுபவித்து வருவதாகவும் கூறுவதை மனுதாரரே தக்க சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும். அரசிற்கு சொந்தமான தரிசு என வகைப்பாடு கொண்ட சொத்தை பொறுத்தும், ஏற்கனவே சென்று கொண்டிருக்கின்ற பாதையை தனிப்பட்ட முறையில் மனுதாரர் எவ்வித உரிமையும் கோர முடியாது.

(ii) தாவா சொத்திற்கு அருகிலுள்ள ச.எண்.749/5 அரசிற்கு சொந்தமான தரிசு புறம்போக்கு நிலத்தில் மயானம் அமைக்க வேண்டி கோபாலன் மற்றும் பலர் சேர்ந்து 1ம் எதிர்மனுதாரரிடம் மனு கொடுத்து மயானம் அமைப்பதற்காக தேர்வு செய்துள்ளதாகவும், இந்நிலத்திற்கு அருகில் ஏராளமான நபர்கள் விவசாயம் செய்து வருவதாகவும் கூறுவது உண்மையல்ல. அதில் இரண்டு ஆழ்துளை கிணறும், ஒரு திறந்த வெளி கிணறும் உள்ளதால் கிணற்றுநீரை அப்பகுதியிலுள்ள சுமார் 50 குடும்பத்தினர் குடிநீருக்காகவும், சமையலுக்கும் பயன்படுத்தி வருவதாகவும், அருகில் ஏரி உள்ளதால் அதில் மழைக்காலங்களில் தண்ணீர் நிரம்பும் என்றும், இந்நிலையில் மேற்படி நிலத்தில் மயானம் அமைத்தால் குப்பைகள் குவிக்கப்பட்டு குடிதண்ணீர் பாதிப்படையும் என்றும், மேற்படி நிலத்தில் மயானம் அமைக்க 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தேர்ந்தெடுத்து விட்டதாகவும், கடந்த 05.04.2023ம் தேதியில் 8 முதல் 10 எதிர்மனுதாரர்களுக்கு ஆதரவாக 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் சாலை அமைக்க முயன்றனர் என கூறுவதும் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட சங்கதிகளாகும்.

(iii) மனுதாரரின் பட்டாநிலத்தில் அவரின் ஒப்புதலை பெறாமலும், முறையாக சட்ட அறிவிப்பு கொடுக்காமலும் பாதை உருவாக்க முயற்சிப்பதாகவும், தாவா சொத்தில் ஏதேனும் பொது வழி உருவாக்கினால் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு விடும் என்றும், மேலும் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் சாலை அமைக்க 1

முதல் 7 எதிர்மனுதாரர்கள் செயல்படுவதாகவும் கூறுவது பொய்யாகும். தாவா சொத்திற்கு வடபுறம் பன்னெடுங்காலமாக கீரைக்காரனூர் தார்சாலை முதல் பட்டுவாயன் தெரு வழியாக மூர்த்திகாடு தார்சாலை வரை சுமார் 2100 மீட்டர் வரை மண்சாலை சென்று கொண்டிருக்கிறது. இதில் சுமார் 800 மீட்டர் ஓரடுக்கு சாலை 1996 ம் ஆண்டில் அமைக்கப்பட்டு சுமார் 120 குடும்பங்களின் பயன்பாட்டில் உள்ளது. மேலும் எதிர்மனுதாரர்கள் ஏற்கனவே சென்று கொண்டிருக்கின்ற சாலையை விடுத்து மனுதாரரின் நிலத்தில் தற்போது புதிதாக எந்த சாலையினை போடவில்லை. மனுதாரருக்கும், 8 முதல் 10 எதிர்மனுதாரர்களுக்கும் உள்ள தனிப்பட்ட பிரச்சனையின் காரணமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர் தரப்பில் தாவா சொத்து மனுதாரருக்கு தானசெட்டில் மெண்ட்டின் படி பாத்தியப்பட்டு, மனுதாரர் அதன் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாகவும், மேற்படி தாவா சொத்திற்கு அருகிலுள்ள ச.எண்.749/5 அரசிற்கு சொந்தமான தரிசு புறம்போக்கு நிலத்தில் மயானம் அமைக்க 1 ம் எதிர்மனுதாரர் முயற்சிப்பதாகவும், மேற்படி நிலத்தில் மயானம் அமைத்தால் அருகிலுள்ள நிலங்கள் பாழாகிவிடும் என்றும், மேலும் மனுதாரர் அனுபவத்திலுள்ள தாவாசொத்தில் கடந்த 05.04.2023 ம் தேதியில் அத்துமீறி நுழைந்து

சாலை அமைக்க வேண்டி தாவா சொத்தை அளக்க முயற்சித்ததாகவும், மனுதாரரின் சம்மதமில்லாமல் தாவா சொத்தில் சாலை அமைக்க முயற்சிப்பதால் மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) அதே சமயத்தில் 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்திற்கு வடபுறம் பன்னெடுங்காலமாக கீரைக்காரனூர் தார்சாலை முதல் பட்டுவாயன் தெரு வழியாக மூர்த்திகாடு தார்சாலை வரை சுமார் 2100 மீட்டர் வரை மண்சாலை சென்று கொண்டிருக்கிறது என்றும், இதில் சுமார் 800 மீட்டர் ஓரடுக்கு சாலை 1996 ம் ஆண்டில் அமைக்கப்பட்டு சுமார் 120 குடும்பங்களின் பயன்பாட்டில் உள்ளது என்றும், மேலும் எதிர்மனுதாரர்கள் ஏற்கனவே சென்று கொண்டிருக்கின்ற சாலையை விடுத்து மனுதாரரின் நிலத்தில் தற்போது புதிதாக எந்த சாலையினை போடவில்லை என்றும், மனுதாரருக்கும், 8 முதல் 10 எதிர்மனுதாரர்களுக்கும் உள்ள தனிப்பட்ட பிரச்சனையின் காரணமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் தாவா சொத்து மனுதாரரின் அனுமதியின்றி சாலை அமைக்க முயற்சிப்பதாக கூறி வாதி/மனுதாரரால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்திற்கு வடபுறம் ஏற்கனவே சென்று கொண்டிருக்கின்ற சாலையை விடுத்து மனுதாரரின் நிலத்தில் தற்போது புதிதாக எந்த சாலையினை போடவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(iv) இச்சூழ்நிலையில் மனுதாரர் தாவாவில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த

இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது, தாவா சொத்தை மனுதாரர் பயன்படுத்தி வருவதாக மனுதாரர் நிரூபித்துள்ளாரா? என்பதும், தாவா சொத்தின் பேரிலுள்ள தனது சட்டப்படியான சுவாதீன அனுபவத்தை மனுதாரர் நிரூபித்துள்ளாரா? என்பதும், தாவா சொத்தில் எதிர்மனுதாரர்கள் சட்டத்திற்கு புறம்பாக சாலை அமைக்க முயற்சித்தனரா? என்பதும், மனுதாரரின் சட்டப்படியான சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்தனரா? என்பதுமே ஆகும்.

(vi) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vii) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரரால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற

வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.02.28 17:21:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை</u>

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.02.28 17:21:51 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.